அனுப்புநர்

பா. பொன்னையா, இ.ஆ.ப.,
ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் மாளிகை, சைதாபேட்டை,
சென்னை–15.

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
அனைத்து மாவட்டங்கள்.
(சென்னை நீங்கலாக)

ந.க.எண்.1025/2025/PRI (A) –3, **நாள். 20.03.2025**

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம ஊராட்சி நிர்வாகம் – சொத்து வரி – விரிவான வழிகாட்டுதல்கள் – தொடர்பாக.

பார்வை: தொடர்புடைய ஆவணங்கள்.

****

சொத்து வரியை மதிப்பீடு செய்து அந்த வருவாயினை வசூலிப்பது கிராம ஊராட்சியின் முக்கிய பணியாகும். கிராம ஊராட்சியின் அதிகார வரம்பிற்குள் உள்ள அனைத்து சொத்து வரி விதிப்புகள் (குடியிருப்புகள்/ வணிக / தொழிற்சாலைகள்/ சுய நிதி நிறுவன கட்டிடங்கள்) சரியாக மதிப்பிடப்பட்டு உரிய கேட்புப் பதிவேட்டில் சேர்க்கப்படுவதை உறுதி செய்வது சொந்த வருவாயினைப் பெருக்குவதற்கும் கிராம ஊராட்சியின் தன்னிறைவான, திறமையான செயல்பாட்டிற்கும் முக்கியமானது. மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை வரி விதிப்பிற்குள் கொண்டு வர முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் படி மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்கள் மதிப்பிடுவதற்கான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை அடையாளம் காணுதல்

மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை மதிப்பிடுவதற்கான முதல் படி, எந்தெந்த கட்டிடங்கள் தற்போது கிராம ஊராட்சியின் சொத்து வரி கேட்புப் பதிவேட்டில் விடுபட்டுள்ளன என்பதை அடையாளம் கண்டு வரி விதிப்பிற்குள் கொண்டு வரவேண்டும்.

1.1. தற்போதுள்ள சொத்து வரி கேட்புகளை மதிப்பாய்வு செய்தல் :–

எந்த கட்டிடங்கள் ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன மற்றும் வரி விதிப்பின் ஒரு பகுதியாக உள்ளன என்பதை அடையாளம் காண கிராம ஊராட்சியின் தற்போதைய சொத்து வரிப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்து,

விடுபட்ட வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளை கண்டறிய வேண்டும்.

ஊராட்சி செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சியிலுள்ள அனைத்து சொத்துக்களின் பட்டியலையும் தொகுத்து, சொத்து வரி பதிவுகளுடன் சரி பார்க்க வேண்டும்.

1.2. கள ஆய்வின் மூலம் சரிபார்த்தல் :–

- முந்தைய மதிப்பீடுகளில் விடுபட்ட கட்டிடங்களை அடையாளம் காண கள ஆய்வு அவசியம். இந்த கள ஆய்வினை பின்வரும் வழிகளில் மேற்கொள்ளலாம்
    - கிராம ஊராட்சி செயலர்கள், ஊராட்சி பணியாளர்கள், ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனைத்து பகுதிகளிலும் உள்ள கட்டிடங்களைக் குறிப்பாக புதியதாக உருவாக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் அல்லது தொலைதூர இடங்களில் உள்ள கட்டிடங்களுக்கு கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்தல்.
    - புதியதாக கட்டப்பட்ட வீடுகள்/ தற்காலிக அல்லது அனுமதியற்ற கட்டிடங்கள்/ இப்போது நிரந்தரமாகிவிட்டவை/ புதிய வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை சரிபார்த்து அவை இன்னும் வரி அமைப்பில் சேர்க்கப்படவில்லை எனில், வரிவிதிப்பில் கட்டாயம் கொண்டு வரவேண்டும்.

1.3. முதன்மைத் தரவுகளைச் சேகரித்தல்

- கள ஆய்வின் போது, மதிப்பீடு செய்யப்படாத ஒவ்வொரு கட்டிடங்களும் பின்வரும் தரவு சேகரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
    - உரிமையாளரின் பெயர்
    - வீட்டு முகவரி
    - கட்டுமான வகை (நிரந்தரம், தற்காலிகம்)
    - தளங்களின் எண்ணிக்கை,
    - நிலப்பகுதி,
    - சொத்தின் பயன்பாடு (குடியிருப்பு, வணிக மற்றும் தொழிற்சாலைகள்)

        - கட்டப்பட்ட வீடுகளின் கூரை வகையை (வேயப்பட்ட கூரை, ஓடு, கான்கிரிட் வீடுகள்) குறிப்பிட வேண்டும்.
    - மேலும், குடிநீர் வழங்கல் அல்லது மின்சாரம் போன்ற பயன்பாட்டு இணைப்புகளை மதிப்பீடு செய்து சொத்து வரி வசூலிப்பதற்கான முக்கியமான அளவுகோலாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. சொத்து வரி கணக்கீட்டு முறை

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் கிராம ஊராட்சிகளுக்குத் தங்கள் அதிகார வரம்பிற்குள் உள்ள கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்க அதிகாரம் அளிக்கிறது.
- இந்தச் சட்டத்தின் படி,
    - கேட்பு பதிவேட்டின் அடிப்படையில் வரி விதிக்கப்பட வேண்டிய சொத்துக்களின் பட்டியலை ஊராட்சிச் செயலர் தயாரிக்க வேண்டும்.
    - கேட்புப் பட்டியலைத் தயாரிக்கப் பின்வரும் காரணிகள் அடிப்படையில் ஊராட்சி வரி விதிக்கலாம்.
        - சொத்தின் அளவு (கட்டமைக்கப்பட்ட பகுதி)
        - வீடுகளின் கூரை வகைகள் (கான்கிரீட், ஓடுகள் மற்றும் வேயப்பட்ட கூரை)
        - பயன்பாட்டின் நோக்கம் (குடியிருப்பு, வணிக மற்றும் தொழிற்சாலை)
- சொத்தின் வரிவிதிப்பு மதிப்பு சதுர அடி பரப்பளவின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும் (தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994. அட்டவணை–I இல் வரையறுக்கப்பட்ட முறை – இணைப்பு–1)
- **வரிவிதிப்புக் கணக்கீடு :–**
    - கட்டிடத்தின் அளவு (சதுர அடியில் அளவிடப்படுகிறது)
    - கட்டுமானத்தின் தரம் (நிரந்தரம் மற்றும் தற்காலிகம் என வகைப்படுத்த வேண்டும்)
    - பயன்பாட்டு வகைப்பாடு (குடியிருப்பு, வணிகம் மற்றும் தொழிற்சாலை) இவற்றின் அடிப்படையில், வரிவிதிப்புத் தொகை சதுர அடி அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.
- அனைத்து மதிப்பீடுகளிலும் விதிகளின்படி சரியான வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
- இந்த செயல்முறையை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும்.

3. வரி கேட்பு இறுதி செய்தல் :

3.1 . சொத்து வரி கேட்புப் பட்டியல் தயாரித்தல்

- கள ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஊராட்சி செயலர்கள் மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களின் விவரங்களைக் கொண்ட வரைவு சொத்துவரிக் கேட்புப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். இப்பட்டியல் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- **சொத்து விவரங்கள்**: உரிமையாளரின் பெயர், முகவரி, சொத்தின் வகை, அளவு மற்றும் பயன்பாடு.
- **முன்மொழியப்பட்ட வரிக் கணக்கீடு** : சதுர அடி கணக்கீட்டின் அடிப்படையிலான சொத்து வரிக் கேட்பு ஆகியவை தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

3.2 . சொத்து வரிக் கேட்புப் பட்டியலை இறுதி செய்தல்

- தனி அலுவலரின் / கிராம ஊராட்சித் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு VPTAX இணையதளத்தில் இந்த வரி விதிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

3.3. வரிக் கேட்பு அறிவிப்பு

- பின்வரும் விவரங்களுடன் அனைத்து சொத்துவரி மதிப்பீடுகளுக்கு வரிக் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் :–
  - செலுத்த வேண்டிய வரி தொகை.
  - பணம் செலுத்துவதற்கான காலக்கெடு.
  - கட்டணம் செலுத்தும் முறைகள் (இணையவழியில், கையடக்கக்கருவி (POS Machine) வழியில், கிராம ஊராட்சி அலுவலகத்தில்)

○ சொத்து வரி, வணிக மற்றும் தொழிற்சாலை பிரிவுகளாக இருந்தால் அறிவிப்பில் குறிப்பிடப்பட வேண்டும். இதன் அடிப்படையில் மிகுவரி (Surcharge) [வணிக கட்டிடங்கள் –20%, தொழிற்சாலை–60%] கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

4. வரி வசூல் மற்றும் கண்காணிப்பு

- <u>வரி வசூல்</u> : புதிதாக சொத்து வரிக் கேட்பில் சேர்க்கப்பட்டவை உட்பட அனைத்து மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளின் உரிய வரி உரிய நேரத்தில் வசூல் செய்வதை கிராம ஊராட்சி செயல் அலுவலர்/ கிராம ஊராட்சித் தலைவர் / தனி அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

- **<u>கண்காணிப்பு</u>** : மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் புதிதாக மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து கட்டிடங்களிலும் VP Tax தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வழக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு இறுதி செய்ய வேண்டும்.
- **<u>ஊராட்சி செயலர்</u>** : புதுப்பிக்கப்பட்ட பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.

5. தொழில்நுட்பத்தின் பயன்பாடு

- **<u>இணையதள மேலாண்மை</u>:–** முறையான கேட்பினை உறுதி செய்வதற்கும், வரி வசூல், கண்காணிப்பு மற்றும் எதிர்கால மதிப்பீடுகளை எளிதாக்குவதற்கும் சொத்து வரி மதிப்பீடுகளின் பதிவுகளை ஊராட்சிச் செயலர்கள் கண்காணிக்க வேண்டும்.
- **<u>மின்னனு இயந்திரம்</u>:– அனைத்து ஊராட்சிகளிலும் கையடக்கக்கருவி** (POS Machine) **மூலம் வரி வசூல் செய்திடுவதை உறுதி செய்ய வேண்டும்**.

இந்த விரிவான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், கிராம ஊராட்சிகளில் மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை திறம்படவும், திறமையாகவும் வரிக் கேட்பிற்குள் கொண்டு வர முடியும்.

மேற்படி, இந்த வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சொத்து வரி நிர்ணயம் செய்வதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த வழிமுறையின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை அடுத்துவரும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/தணிக்கை) ஆகியோரின் ஆய்வுக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

இணைப்புகள்: 1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172
2. சொத்துவரி மாதிரி கட்டண அட்டவணை

ஒம்/– பா. பொன்னையா
ஆணையர்
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி

20/03/25
ஆணையருக்காக

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை– 09.

20.3.2025

2. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்,
   மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
   அனைத்து மாவட்டங்கள்.
3. உதவி இயக்குநர் (ஊராட்சிகள் / தணிக்கை),
   அனைத்து மாவட்டங்கள்.

இணைப்பு–1

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 172 – சொத்து வரி

1. ""இந்த சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தொடர்புடைய உள்ளூர் பகுதிகளில் எந்த அடிப்படையில் சொத்து வரி விதிக்கப்பட்டதோ அதே அடிப்படையில் அல்லது வகைப்படுத்தப்பட்ட கட்டட பரப்பிடம் அடிப்படையில் உட்பிரிவு (3)–ன் வகைமுறைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சி ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இணைப்புப் பட்டியல் 1–ல் கூறப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள அனைத்து வீடுகளின் மீதும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

2. சொத்து வரியானது, அந்த வீட்டு மனையிடத்திற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை எவையேனுமிருப்பின் அந்த நில வரியானது முன்னதாகச் செலுத்தப்படுவதற்கு உட்பட்டு, அவ்வீட்டின் மீதும் அதற்குள் அல்லது அதன் மீது காணப்படுவதும், அத்தகைய வரியைச் செலுத்தக் கட்டுப்பாடுடைய நபருக்குச் சொந்தமானதுமான அசைவியல் சொத்து ஏதேனுமிருப்பின் அதன் மீதும், முதலாவது பொருட்பிணைப் பொறுப்பாக இருக்கும்.

3. அரசு, ஊராட்சி கிராமம் எதனின் தொடர்பாகவும், அல்லது எந்த வகுப்பைச் சேர்ந்த ஊராட்சி கிராமங்களைப் பொறுத்தும், சொத்து வரி விதிப்பை அரை ஆண்டிற்கு ஒருமுறையா அல்லது ஆண்டிற்கு ஒரு முறையா என்பதை அறிவிக்கையின் மூலம் நிர்ணயிக்க வேண்டும் மற்றும் அவ்வாறு நிர்ணயிக்கும்போது பின்வரும் பொருள்களை கருத்தில் கொள்ள வேண்டும். அவைகளானவை :–

   (அ) பிரிவு–(4)ன் படி உள்ளூர் பகுதியின் வகைப்பாடு ;

   (ஆ) கிராம ஊராட்சியின் ஆண்டு வருவாய்கள் ;

   (இ) கிராம ஊராட்சியின் மக்கள்தொகை மற்றும் அவ்வூராட்சியில் உள்ள மக்களின் முக்கிய தொழில் ; மற்றும்

   (ஈ) வகுத்துரைக்கப்படக்கூறிய பிற பொருட்கள்

4. பின்வருவனவற்றை வகை செய்யும் பொருட்டு அரசு விதிகளை இயற்றலாம்.

   (அ) வரியை எந்த நபர்கள் செலுத்தக் கூடியவர் மற்றும் வீடுகளின் சொத்துரிமை மாற்றங்கள் பற்றிய அறிவிப்புகள் கொடுத்தல்.

   (ஆ) வரி விதிப்பு தவிர்ப்பு மற்றும் ஏனைய குறைப்புகள்.

   (இ) எந்த சூழ்நிலைகளிலும் எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அரை ஆண்டு அல்லது ஆண்டு எதனின் போதும் கட்டப்பட்ட, மறுபடி கட்டப்பட்ட அல்லது இடிக்கப்பட்ட அல்லது கிராம ஊராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள அல்லது அதிலிருந்து நீக்கப்பட்டுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள வீடுகள் முழுமையாக அல்லது ஒரு

பகுதியாகவோ வரி விதிப்பிற்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும் அல்லது உட்பட்டிருப்பது அற்றுப்போனதாக வேண்டும் என்பது.

5. வீட்டில் குடியிருப்பவர் வீட்டின் உரிமையாளரின் சார்பில் சொத்து வரியை செலுத்துவாராயின் அவ்வாறு குடியிருப்பவர், அதனை வீட்டின் உரிமையாளரிடமிருந்து திரும்பப் பெற உரிமையும், தகுதியும் உடையவர் ஆவார்; மற்றும் அதனை வாடகையிலிருந்து அப்போதோ அல்லது பின்னரோ பிடித்தம் செய்து கொள்ளலாம்.

(விதிகள்: அரசு ஆணை எண். 255, ஊரக வளர்ச்சி துறை, 13.12.1999)""

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

அட்டவணை – 1 சொத்துவரி

வகைப்பாடு	ஒவ்வொரு அரை வருடத்திற்கும் வரி விதிக்கப்பட்டால் (2)				ஒவ்வொரு வருடமும் வரி விதிக்கப்பட்டால் (3)			
	குறைந்தபட்ச விகிதம் அரை வருடத்திற்கு		அதிகபட்ச விகிதம் அரை வருடத்திற்கு		குறைந்தபட்ச விகிதம் வருடத்திற்கு		அதிகபட்ச விகிதம் வருடத்திற்கு	
	ரூ.		ரூ.		ரூ.		ரூ.	
கான்கீரிட் வீடுகள், மெட்ராஸ் மாடி வீடுகள், பன்மாடி வீடுகள்.	0.25	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)	0.50	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)	0.50	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)	1.00	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)
ஓடு வேயப்பட்ட வீடுகள்.	0.15	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)	0.30	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசி மீட்டர்)	0.30	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.60	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)
20 ச.மீ. (ம) அதற்கு மேல் உள்ள ஓலை வேயப்பட்ட வீடுகள்.	0.10	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.20	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.20	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.40	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)
20 ச. மீ. குறைவான ஓலை வேயப்பட்ட வீடுகள்.	0.20	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.50	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	0.40	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)	1.00	1 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்கு (9.29 சதுர டெசிமீட்டர்)

இணைப்பு – 2 சொத்து வரி மாதிரி கட்டண அட்டவணை

சொத்து வரி (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 – அட்டவணை – 1ன் படி)

(சதுர அடியில்)

வீடு வகைகள்	ரூபாய்	250	275	300	325	350	375	400	425	450	475	500
கான்கீரிட் வீடுகள், மெட்ராஸ் மாடி வீடுகள், பன்மாடி வீடுகள்	குறைந்தபட்சம்	125	138	150	163	175	188	200	213	225	238	250
	அதிகபட்சம்	250	275	300	325	350	375	400	425	450	475	500
ஓடு வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்	75	83	90	98	105	113	120	128	135	143	150
	அதிகபட்சம்	150	165	180	195	210	225	240	255	270	285	300
ஓலை வேயப்பட்டவீடுகள்	குறைந்தபட்சம்	50	55	60	65	70	75	80	85	90	95	100
	அதிகபட்சம்	100	110	120	130	140	150	160	170	180	190	200

வீடு வகைகள்	ரூபாய்		525	550	575	600	625	650	675	700	725	750
கான்கீரிட் வீடுகள், மெட்ராஸ் மாடி வீடுகள், பன்மாடி வீடுகள்	குறைந்தபட்சம்		263	275	288	300	313	325	338	350	363	375
	அதிகபட்சம்		525	550	575	600	625	650	675	700	725	750
ஓடு வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்		158	165	173	180	188	195	203	210	218	225
	அதிகபட்சம்		315	330	345	360	375	390	405	420	435	450
ஓலை வேயப்பட்டவீடுகள்	குறைந்தபட்சம்		105	110	115	120	125	130	135	140	145	150
	அதிகபட்சம்		210	220	230	240	250	260	270	280	290	300

வீடு வகைகள்	ரூபாய்		775	800	825	850	875	900	925	950	975	1000
கான்கீரிட் வீடுகள், மெட்ராஸ் மாடி வீடுகள், பன்மாடி வீடுகள்	குறைந்தபட்சம்		388	400	413	425	438	450	463	475	488	500
	அதிகபட்சம்		775	800	825	850	875	900	925	950	975	1000
ஓடு வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்		233	240	248	255	263	270	278	285	293	300
	அதிகபட்சம்		465	480	495	510	525	540	555	570	585	600
ஓலை வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்		155	160	165	170	175	180	185	190	195	200
	அதிகபட்சம்		310	320	330	340	350	360	370	380	390	400

வீடு வகைகள்	ரூபாய்		1025	1050	1075	1100	1125	1150	1175	1200
கான்கீரிட் வீடுகள், மெட்ராஸ் மாடி வீடுகள், பன்மாடி வீடுகள்	குறைந்தபட்சம்		513	525	538	550	563	575	588	600
	அதிகபட்சம்		1025	1050	1075	1100	1125	1150	1175	1200
ஓடு வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்		308	315	323	330	338	345	353	360
	அதிகபட்சம்		615	630	645	660	675	690	705	720
ஓலை வேயப்பட்ட வீடுகள்	குறைந்தபட்சம்		205	210	215	220	225	230	235	240
	அதிகபட்சம்		410	420	430	440	450	460	470	480